# <u>சாதாரணக்கூட்டம்</u>

பல்லடம் நகராட்சி தனிஅலுவலரின் சாதாரணக்கூட்டம் 2019 ம் ஆண்டு டிசம்பர் மாதம் 30 ஆம் நாள் திங்கள் கிழமை காலை 11.00 மணிக்கு பல்லடம் நகராட்சி அலுவலக நகர மன்றக்கூடத்தில் நடைபெற உள்ளது.

தனி அலுவலர்,
பல்லடம் நகராட்சி

## <u>பொருள் : 1</u>

**பல்லடம் நகராட்சியில் பொது நிதி 2019-20 ன் கீழ் கீழ்க்காணும் 13 பணிகளுக்கு 26.11.2019ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்குப் பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.**

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு தொகை (ரூ. இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீடு விழுக்காடு |
|---|---|---|---|---|
| 1 | வார்டு எண்:04 மங்கலம் சாலை அங்காளம்மன் கோவில் முதல் செந்தோட்டம் வரையில் புதிதாக மழைநீர் வடிகால் கட்டுதல் | 6.00 | 1.திருமதி.V.கோமதி, ஒப்பந்ததாரர், பல்லடம் | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.07% குறைவு |
| | | | 2. திரு.P.முருகன் ஒப்பந்ததாரர், பல்லடம் | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 1.08% அதிகம் |
| 2 | வார்டு எண்:07 இராயர்பாளையம் நடுப்புதூர் பகுதியில் ஏற்கனவே உள்ள வடிகாலை உயர்த்துதல் மற்றும் வடிகாலை பராமரித்தல் பணி | 3.00 | 1. திரு.C.தேவராஜ், ஒப்பந்ததாரர், பல்லடம் | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.08% குறைவு |
| | | | 2. திருவாளர்கள்.D.R. கன்ஸ்ட்ரக்ஸன், ஒப்பந்ததாரர், பல்லடம் | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 1.44% அதிகம் |
| 3 | வார்டு எண்:07 செங்குட்டை அருகில் மீனாட்சி அவென்யூ மெயின் சாலையில் தார் சாலை புதுப்பித்தல் மற்றும் புதிதாக மழைநீர் வடிகால் கட்டுதல் | 9.00 | 1.திருவாளர்கள். மதுரா இன்ஞ்னியரிங், ஒப்பந்ததாரர், பல்லடம் | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 1.53% அதிகம் |
| | | | 2. திரு.A.மதுரைவீரன், ஒப்பந்ததாரர், பல்லடம் | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.09% குறைவு |
| 4 | வார்டு எண்:07 மீனாட்சி அவென்யூ மெயின் சாலை மற்றும் வார்டு எண்:18 அம்மாபாளையம் சாலை பகுதியில் குழாய் பதிக்கும் பணி | 0.50 | 1.திரு.V.கருப்பசாமி, ஒப்பந்ததாரர், பல்லடம் | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.07% குறைவு |
| | | | 2. திரு.P.முருகன் ஒப்பந்ததாரர், பல்லடம் | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 1.08% அதிகம் |
| 5 | வார்டு எண்:08 சேரன் நகர் முதல் வீதியில் வடிகால் பராமரித்தல், தடுப்புச் சுவர் மற்றும் கான்கிரீட் சாலை அமைத்தல் | 3.40 | 1. திரு.C.தேவராஜ், ஒப்பந்ததாரர், பல்லடம் | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.12% குறைவு |
| | | | 2. திருவாளர்கள்.D.R. கன்ஸ்ட்ரக்ஸன், ஒப்பந்ததாரர், பல்லடம் | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 1.89% அதிகம் |

| | | | | |
|---|---|---|---|---|
| 6 | வார்டு எண்:08 பெத்தாம்பாளையம் பகுதியில் சாலையின் வடபுறம் புதிதாக பிவிசி குழாய் பதிக்கும் பணி | 3.90 | 1.திரு.V.கருப்பசாமி, ஒப்பந்ததாரர், பல்லடம் | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.11% குறைவு |
| | | | 2. திரு.P.முருகன் ஒப்பந்ததாரர், பல்லடம் | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 1.85% அதிகம் |
| 7 | வார்டு எண்:12 கொசவம்பாளையம் சாலையில் பொது விநியோகக் கடை முதல் ராம் நகர் பகுதியில் ஏற்கனவே உள்ள மழைநீர் வடிகால் வரை புதிதாக மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் அமைக்கும் பணி | 6.50 | 1.திரு.V.கருப்பசாமி, ஒப்பந்ததாரர், பல்லடம் | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.09% குறைவு |
| | | | 2. திரு.P.முருகன் ஒப்பந்ததாரர், பல்லடம் | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 1.74% அதிகம் |
| 8 | வார்டு எண்:12 நியூ எக்ஸ்டன்சன் வீதியில் ஏற்கனவே உள்ள பழுதடைந்த மழைநீர் வடிகாலினை அகற்றி புதிதாக மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் அமைக்கும் பணி | 8.00 | 1.திரு.V.கருப்பசாமி, ஒப்பந்ததாரர், பல்லடம் | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.14% குறைவு |
| | | | 2. திரு.P.முருகன் ஒப்பந்ததாரர், பல்லடம் | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 2.03% அதிகம் |
| 9 | வார்டு எண்:16 ஜே.கே.ஜே. காலனி ஹாஸ்டல் பின்புறம் தரைமட்ட கழிவுநீர் தொட்டி (G.L. Sump) அமைக்கும் பணி | 4.00 | 1. திரு.C.தேவராஜ், ஒப்பந்ததாரர், பல்லடம் | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 2.28% அதிகம் |
| | | | 2. திரு.P.திருமூர்த்தி, ஒப்பந்ததாரர், பல்லடம் | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.15% குறைவு |
| 10 | வார்டு எண்:13 மேற்கு பல்லடம் மேல்நிலைத் தொட்டி வளாகத்தில் புதிதாக கழிப்பிடம் கட்டுதல் | 1.50 | 1. திரு.C.தேவராஜ், ஒப்பந்ததாரர், பல்லடம் | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.14% குறைவு |
| | | | 2. திருவாளர்கள்.D.R. கன்ஸ்ட்ரக்ஸன், ஒப்பந்ததாரர், பல்லடம் | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 2.03% அதிகம் |
| 11 | வார்டு எண்:18 அந்தேரி கவுண்டர் தோட்டம் மற்றும் மார்க்கெட்டிங் சொசைட்டி பின்புறம் உள்ள பகுதிகளில் புதிதாக மழைநீர் வடிகால் கட்டுதல் மற்றும் சிறுபாலம் அமைத்தல் | 9.85 | 1. திரு.P.முருகன் ஒப்பந்ததாரர், பல்லடம் | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 2.19% அதிகம் |
| | | | 2. திரு.C.சண்முகம், ஒப்பந்ததாரர், பல்லடம் | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.07% குறைவு |
| 12 | வார்டு எண்:18 மங்கலம் சாலை மார்க்கெட்டிங் சொசைட்டி முன்புறம் 2 எண்ணிக்கையிலான தரைமட்ட தொட்டி (G.L. Sump) அமைக்கும் பணி | 6.50 | 1.திருமதி.V.கோமதி, ஒப்பந்ததாரர், பல்லடம் | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.09% குறைவு |
| | | | 2. திரு.P.முருகன் ஒப்பந்ததாரர், பல்லடம் | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 1.94% அதிகம் |

| | | | | |
|---|---|---|---|---|
| 13 | நகராட்சி அலுவலகம் மற்றும் அம்மா உணவகத்தில் உள்ள 14 எண்ணிக்கையிலான தீயனணப்பு கருவிகளுக்கு ரீபில் செய்து புதுப்பித்தல் மற்றும் மாதப்பூர் உரக்கிடங்கில் உள்ள நுண்ணுயிர் உரமாக்கல் மையத்திற்கு (MCC) 4 எண்ணிக்கையிலான தீயணைப்பு கருவிகள் புதிதாக பொருத்துதல் | 2.00 | 1.திருவாளர்கள்.பயர் ஸ்டாப் இன்ஞ்ஜினியரிங், கோவை | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.10% குறைவு |
| | | | 2. திருவாளர்கள்.மகா இன்ஞ்ஜினியர்ஸ் அன்ட் கான்ட்ராக்டர்ஸ், கோவை | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 1.87% அதிகம் |

(ந.க.எண் 684/2019/இ1)

மேற்காணும் 13 பணிகளுக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட குறைவாக கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளிகளை ஏற்க தனி அலுவலர் அவர்கள் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

மன்றம் அனுமதி வழங்கலாம்.

## பொருள் : 02

பல்லடம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 10 முதல் 18 வரை நகராட்சிக்கு சொந்தமான ஆழ்துளை கிணறுகள் மற்றும் பொது கிணறுகளில் மழைநீர் கட்டமைப்பு ஏற்படுத்துவதற்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.5.00 இலட்சத்திற்கு மன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண் 684/2019/இ1)

அலுவலககுறிப்பு :

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்கண்ட பணியினை வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மற்றும் 2019-2020 ஆம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

## பொருள் : 03

பல்லடம் நகராட்சி பகுதியில் உள்ள 18 வார்டுகளிலும் தினசரி வீடு தோறும் சென்று குப்பைகள் சேகரிக்கும் திடக்கழிவு மேலாண்மை பணிக்கு, தூய்மை பாரத இயக்கம் திட்டத்தின் கீழ் பேட்டரியால் இயங்கும் வாகனங்கள் (Battery Operated Vehicle) 24 வண்டிகள் வாங்கப்பட்டது. பொது சுகாதார பணிகள் தொய்வு இல்லாமல் மேற்கொள்ள, அவசியம் கருதி பேட்டரியால் இயங்கும் வாகனங்களுக்கு வருடாந்திர பராமரிப்பு பணி மேற்கொள்ள ஆகும் உத்தேசத் தொகை ரூ.5.00 இலட்சத்திற்கு மன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண் 1111/2019/இ1)

அலுவலககுறிப்பு :

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்கண்ட பணியினை வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மற்றும் 2019-2020 ஆம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

## பொருள் : 04

**பல்லடம் நகராட்சி பகுதியில் உள்ள 18 வார்டுகளிலும் தினசரி வீடு தோறும் சென்று குப்பைகள் சேகரிக்கும் திடக்கழிவு மேலாண்மை பணிக்கு, தூய்மை பாரத இயக்கம் திட்டத்தின் கீழ் பேட்டரியால் இயங்கும் வாகனங்கள் (Battery Operated Vehicle) 24 வண்டிகள் வாங்கப்பட்டது. தற்போது 13 எண்ணிக்கை வாகனம் பழுது ஏற்பட்டு இயக்க முடியாத காரணத்தினால், சில வார்டுகளில் தினசரி குப்பைகள் சேகரிக்கும் பணியில் தொய்வு ஏற்பட்டுள்ளது. அதனை பழுது நீக்கம் செய்வதற்கு ஆகும் உத்தேசத் தொகை ரூ.75,000/-க்கு மன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண் 1110/2019/இ1)**

**அலுவலககுறிப்பு :**

**1. மன்றம் அனுமதி வழங்கலாம்.**

**2.மேற்கண்ட பணியினை வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மற்றும் 2019-2020 ஆம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.**

## பொருள் : 05

**பல்லடம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 01 முதல் 09 வரை நகராட்சிக்கு சொந்தமான ஆழ்துளை கிணறுகள் மற்றும் பொது கிணறுகளில் மழைநீர் கட்டமைப்பு ஏற்படுத்துவதற்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.5.00 இலட்சத்திற்கு மன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண் 684/2019/இ1)**

**அலுவலககுறிப்பு :**

**1. மன்றம் அனுமதி வழங்கலாம்.**

**2.மேற்கண்ட பணியினை வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மற்றும் 2019-2020 ஆம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.**

## பொருள் : 06

பல்லடம் நகராட்சிக்குட்பட்ட பகுதியில் சேகரமாகும் குப்பைகளை கணபதிபாளையம் ஊராட்சிக்கு உட்பட்ட பகுதியில் உள்ள திறந்தவெளியில் கொட்டுவதாக அருகில் உள்ள விவசாயிகள் பசுமை தீர்ப்பாயத்தில் மனு எண்.21/2019 ன்படி வழக்கு தொடர்ந்துள்ளனர். இவ்வழக்கு சம்பந்தமாக பல்லடம் நகராட்சி பகுதியில் உள்ள குப்பைகளை கணபதிபாளையம் ஊராட்சி பகுதியில் கொட்டப்படவில்லை என அரசு வழக்கறிஞர் திரு.கமலேஷ் கண்ணன் என்பவர் நகராட்சி சார்பாக ஆஜராகி வழக்கு நடைபெற்று வருகிறது. தற்போது மேற்கண்ட பொருள் குறித்து வழக்கறிஞர் கட்டணமாக ரூ.15000 / ஐ வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம்.

## பொருள் : 07

பல்லடம் நகராட்சி வார்டு எண்.1 முதல் 18 முடிய உள்ள பகுதியில் வசித்து வரும் பொதுமக்கள், பள்ளிகளில் பயின்று வரும் மாணவ மாணவியர்கள், அம்மா உணவகம், பேருந்து நிலையம், மார்க்கெட் மற்றும் காய்ச்சல் பாதிக்கப்பட்ட இடங்கள் ஆகிய பகுதிகளில் டெங்கு காய்ச்சல் பரவாமல் தடுக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு நிலவேம்பு குடிநீர் வழங்க தேவையான நிலவேம்பு சூரணம் அரசு அங்கீகாரம் பெற்ற தமிழ்நாடு மல்டி பர்பஸ் இன்ட்கோ சர்வீஸ், திருச்சி என்னும் நிறுவனத்திடம் வாங்குவதற்கும், அதற்குண்டான உத்தேச செலவினத்தொகை ரூ.400000/ ஐ பொதுநிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலககுறிப்பு**

1. பொது சுகாதார அவசர அவசியம் கருதி மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட செலவினத்தை பொது நிதியில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

## பொருள் : 08

**பல்லடம் நகராட்சியில் பொது நிதி 2019-20 ன் கீழ் கீழ்க்காணும் 5 பணிகளுக்கு 06.12.2019ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்குப் பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.**

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு தொகை (ரூ. இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீடு விழுக்காடு |
|---|---|---|---|---|
| 1 | வார்டு எண் 15 அண்ணாநகர் ஆணையர் குடியிருப்பிற்கு வர்ணம் பூசுதல், மின்சாதன பொருட்கள் , குழாய் இணைப்பு பழுது பார்த்தல், மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பு ஏற்படுத்துதல் மற்றும் தளவாட பொருட்கள் சப்ளை செய்தல் | 3.50 | 1.திரு.V.கருப்பசாமி, ஒப்பந்ததாரர், பல்லடம் | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.09% குறைவு |
| | | | 2. திரு.P.முருகன் ஒப்பந்ததாரர், பல்லடம் | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 1.98% அதிகம் |
| 2 | வார்டு எண் 12 மேற்கு பல்லடம் அரிசன காலனி பகுதியில் ஏற்கனவே உள்ள ஆழ்துளைக் கிணற்றில் புதிதாக 7.50 HP மி,ன மோட்டார், அதற்குரிய கேபிள்கள் மற்றும் பழுதான குழாய்களை மாற்றுதல் | 1.50 | 1.திரு.V.கருப்பசாமி, ஒப்பந்ததாரர், பல்லடம் | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 1.74% அதிகம் |
| | | | 2. திரு.P.முருகன் ஒப்பந்ததாரர், பல்லடம் | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.07% குறைவு |
| 3 | வார்டு எண் 08 அண்ணாமலையார் நகர் மற்றும் வார்டு எண் 10 ஸ்ரீ நகர், கொங்கு நகர் ஆகிய பகுதிகளில் புதியதாக குடிநீர் விநியோகக் குழாய் பதித்தல் | 1.50 | 1.திரு.V.கருப்பசாமி, ஒப்பந்ததாரர், பல்லடம் | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 1.95% அதிகம் |
| | | | 2. திரு.P.முருகன் ஒப்பந்ததாரர், பல்லடம் | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.11% குறைவு |

| | | | | |
|---|---|---|---|---|
| 4 | வார்டு எண் 07 இராயர்பாளையத்தில் புதிய குடிநீர் மேல்நிலைத் தொட்டி பிரதான குழாயில் Interlink செய்யவும், Air valve, Sluice valve மற்றும் water meter ஆகிய பணிகள் செய்தல் | 2.00 | 1.திரு.V.கருப்பசாமி, ஒப்பந்ததாரர், பல்லடம் | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.06% குறைவு |
| | | | 2. திரு.P.முருகன் ஒப்பந்ததாரர், பல்லடம் | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 2.12% அதிகம் |
| 5 | நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அலுவலகத்தில் புதிதாக அமைக்கப்பட உள்ள காணொளி கூட்ட அரங்கிற்கு திரைச்சீலை, வர்ணம் பூசுதல், எழுத்துப் பலகைகள் அமைத்தல் மற்றும் ஏற்கனவே உள்ள ஆய்வுக்கூட்ட அரங்கிற்கு வர்ணம் பூசுதல், திரைச்சீலை ஆகிய பணிகள் மேற்கொள்ளுதல் | 2.60 | 1.திரு.V.கருப்பசாமி, ஒப்பந்ததாரர், பல்லடம் | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.08% குறைவு |
| | | | 2. திரு.P.முருகன் ஒப்பந்ததாரர், பல்லடம் | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 1.67% அதிகம் |

(ந.க.எண் 1068/2019/இ1)

மேற்காணும் 5 பணிகளுக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட குறைவாக கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளிகளை ஏற்க தனி அலுவலர் அவர்கள் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு</u>

மன்றம் அனுமதி வழங்கலாம்.

**<u>பொருள் : 09</u>**

பல்லடம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.3 தெற்குபாளையம் ஏ.டி காலனி மெயின் சாலையில் சிறுபாலம் அருகே சிமெண்ட் சாலை சுமார் 50 மீட்டர் நீளம் மிகவும் பழுதடைந்து வாகனங்கள், பொதுமக்கள் செல்வதற்கு ஏதுவாக இல்லை. எனவே பொதுமக்கள் நலன் கருதி மேற்கண்ட சாலையினை பழுது பார்ப்பதற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.4.00 இலட்சம் ஆகும். மேற்கண்ட பணி மேற்கொள்ள தனி அலுவலரின் நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்கண்ட பணியினை வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மற்றும் 2019–20 ஆம் ஆண்டு திருத்திய வரவு செலவு திட்டத்தின் மூலம் பணி மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

## பொருள் : 10

பல்லடம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 04 செந்தோட்டம் மற்றும் SKR நகர் செல்லும் சாலையில் தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் உட்கட்டமைப்பு திட்டத்தின் கீழ் சாலைப்பணிகள் மேற்கொள்ளப்படுவதை தொடர்ந்து அப்பகுதியை சட்டமன்ற உறுப்பினர் மற்றும் மண்டல செயற்பொறியாளர் ஆய்வில் அப்பகுதியில் உள்ள சில வீடுகள் சாலையின் மட்டத்திற்கு உள்ளதாலும் அப்பகுதி கழிவுநீர் செல்ல குழாய் அமைப்பின் மூலம் ஆய்வுத்தொட்டி அமைக்கப்பட்டு உள்ளது. சாலையினை சீரமைக்கும் போது உயர்த்தப்பட வேண்டியுள்ளதால் அவ்விடத்தில் உள்ள அதிகப்படியான மண் பேடைகளை (EARTH BUND) வெட்டி எடுத்து அப்புறப்படுத்தவும் மற்றும் RCC PIPE அமைக்க அவசியம் மேற்கொள்ளப்படவேண்டும். எனவே, அப்பகுதி பொது மக்களின் சாலைவசதி மற்றும் பொது சுகாதார நலன் கருதி இப்பணியினை மேற்கொள்ள ஆகும் செலவினம் ரூ.3,40,000 க்கு உரிய நிர்வாக அனுமதி வேண்டி மன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1.மன்றம் அனுமதி வழங்கலாம்.

2.மேற்கண்ட பணியினை நகராட்சி பொதுநிதியின் மூலம் மேறகொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

3.2019-2020 ஆம் ஆண்டு திருத்திய வரவு மற்றும் செலவு திட்டத்தில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

## பொருள் : 11

பல்லடம் நகராட்சியின் 2018 – 2019 ம் ஆண்டிற்குரிய ஐந்தொகை கணக்குகளை தணிக்கை செய்து தணிக்கை அறிக்கை மற்றும் தணிக்கை குறிப்பினை உள்ளாட்சி நிதித்தணிக்கை துறை, திருப்பூர் அவர்களால் தட்டச்சு, ஜெராக்ஸ் மற்றும் பைண்டிங் செய்து ஐந்து நகல்கள் எடுக்கப்பட்டமைக்கான தொகை ரூ. 9000/- ஐ எஸ்.கவிதா, சங்கர் டைப்பிங் சன்டர், குமார் நகர், திருப்பூர் அவர்களுக்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

அனுமதிக்கலாம்.

## பொருள் : 12

பல்லடம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.16 மாணிக்காபுரம் சாலை சந்திப்பு முதல் குமார் தோட்டம் வரை உள்ள தார்சாலை பழுதடைந்துள்ளதை பல்லடம் சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் சாலையினை சீரமைக்குமாறு அறிவுறுத்தியதின் அடிப்படையில் மேற்கண்ட தார்சாலை பணியினை மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.9.90 இலட்சம் ஆகும். மேற்கண்ட பணி மேற்கொள்ள தனி அலுவலரின் நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்கண்ட பணியினை வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மற்றும் 2019–20 ஆம் ஆண்டு திருத்திய வரவு செலவு திட்டத்தின் மூலம் பணி மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

## பொருள் : 13

பல்லடம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.18 எஸ்.ஏ.பி நகர், வார்டு எண். 01 என்.எஸ்.பி நகர் மற்றும் வார்டு எண். 7 ராயர்பாளையம் ஆகிய பகுதிகளில் குடிநீர் விநியோகம் சீர் செய்யும் பொருட்டு முறையே 1.00 இலட்சம், 1.00 இலட்சம் மற்றும் 2.00 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகள் அமைக்கப்பட்டுள்ளது. எனவே மூன்று மேல்நிலைத்தொட்டிகள் மூலம் அப்பகுதி பொதுமக்களுக்கு பாதுகாப்பான குடிநீர் வழங்கும் பொருட்டு திரவ குளோரின் அமைப்பு ஏற்படுத்தி விநியோகம் அவசியம் செய்யப்பட வேண்டும். புதிய மூன்று மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகளுக்கு திரவக்குளோரின் அமைப்புகள் ( Liquid Chlorine Method) ஏற்படுத்த Automatic chlorination system, Automatic Starter, Flow sensor, 1000 Litre PVC, HDPE Tank, Copper cable மற்றும் Specials ஆகியவற்றிற்கு ஆகும் மதிப்பீடு தொகை ரூ. 6.40 இலட்சம் ஆகும். மேற்கண்ட பணி மேற்கொள்ள தனி அலுவலரின் நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.

2. மேற்கண்ட பணியினை வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மற்றும் 2019–2020 ஆம் ஆண்டு வரவு செலவு திட்டத்தின் மூலம் பணி மேற்கொள்ளலாம்.

## பொருள் : 14

**பல்லடம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 10 வடுகபாளையம் அரிசன காலனி பகுதியில் உள்ள கான்கீரிட் சாலையில் ஏற்கனவேயுள்ள 2” PVC குழாய் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.தற்சமயம் இப்பகுதியில் UIDSSMT திட்டப்பணியின் மூலம் வீட்டு இணைப்புகள் கொடுக்கப்பட்டுள்ளதால் போதிய குடிநீர் அழுத்தம் இல்லாமல் குடிநீர் விநியோகம் சீராக இல்லை.மேலும், காந்திஜி வீதி தார்சாலை பகுதியிலும் 2” PVC குழாய் மூலம் விநியோகிக்கப்படும் குழாயில் போதிய குடிநீர் அழுத்தம் இல்லாமல் குடிநீர் விநியோகம் சீராக இல்லை.எனவே, இவ்விரு இடங்களிலும் புதிதாக 3” PVC குடிநீர் விநியோகம் குழாய் பொருத்துதலும் மற்றும் குடிநிர் தவிர பிற தேவைகளுக்கு பயன்படுத்தப்படும் ஆழ்துளைக்குழாய் கிணற்று நீரினை விநியோகம் செய்யும் பொருட்டு குடிநீர் விநியோக குழாய் பொருத்தி சீரான முறையில் குடிநீர் விநியோகம் செய்ய ஆகும் செலவினம் மதிப்பீடு ரூ.3.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.**

**அலுவலகக் குறிப்பு :**

**1.மன்றம் அனுமதி வழங்கலாம்.**

2.மேற்கண்ட பணியினை வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மற்றும் 2019-2020 ஆம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

## பொருள் : 15

பல்லடம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.7 மீனாட்சி அவென்யூ பகுதியில் உள்ள குறுக்கு வீதியில் உள்ள வீடுகளிலிருந்து வெளியேற்றப்படும் கழிவுநீர் ஆங்காங்கே குட்டை போல் தேங்கி , பொது சுகாதாரத்திற்கு மிகவும் கேடாக உள்ளது. எனவே அப்பகுதி பொதுமக்கள் நலன் கருதி, புதியதாக வடிகால் கட்டுவதற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.2.00 இலட்சம் ஆகும். மேற்கண்ட பணி மேற்கொள்ள தனி அலுவலரின் நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.

2. மேற்கண்ட பணியினை வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மற்றும் 2019–20 ஆம் ஆண்டு திருத்திய வரவு செலவு திட்டத்தின் மூலம் பணி மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

## பொருள் : 16

பல்லடம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.3 தெற்குபாளையம் அரிசனகாலனி பகுதியில் உள்ள தார்சாலை பழுதடைந்துள்ளதை பல்லடம் சட்டமன்ற உறுப்பினர், மற்றும் ஆணையாளர், அவர்களின் நேரடி ஆய்வின்போது சாலையினை சீரமைக்குமாறு கோரியதால், அதற்கான தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.9.00 இலட்சம் ஆகும். மேற்கண்ட பணி மேற்கொள்ள தனி அலுவலரின் நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.

2. மேற்கண்ட பணியினை வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மற்றும் 2019–20 ஆம் ஆண்டு திருத்திய வரவு செலவு திட்டத்தின் மூலம் பணி மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

## பொருள் : 17

பல்லடம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.17 மங்கலம் ரோடு, என்.ஜி.ஆர் ரோடு சந்திப்பு முதல் பாரதிபுரம் சிறுபாலம் சந்திப்பு வரை மிகவும் பழுதடைந்த மழைநீர்வடிகால் அகற்றி புதியதாக மழைநீர்வடிகால் அமைக்க சட்டமன்ற உறுப்பினர் பல்லடம், மற்றும் ஆணையாளர் அவர்களுடன் நேரடி ஆய்வின்போது அறிவுறுத்தியதால் மேற்கண்ட பணியினை மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.7.20 இலட்சம் ஆகும். எனவே இப்பணியினை மேற்கொள்ள நிர்வாக அனுமதி வேண்டி மன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.

2. மேற்கண்ட பணியினை பொது நிதியில் மேற்கொள்ளவும் மற்றும் 2019–2020 ஆம் ஆண்டு திருத்திய வரவு செலவு திட்டத்தின் மூலம் பணி மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

## பொருள் : 18

பல்லடம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.08 மற்றும் 14 ஆகிய பகுதிகளில் புதிதாக அமைந்துள்ள குடியிருப்பு பகுதிகளில் தெருவிளக்கு அமைக்கும் பொருட்டு மின் விளக்குகள் பொருத்துவதற்கு தேவையான கிளாம்புகள் ( M.S Clamp set) 20 எண்ணிக்கை மற்றும் G.I பைப் ( வளைவு குழாய்கள்) – 20 எண்ணிக்கைகள் வாங்கி பயன்படுத்த வேண்டியுள்ளதால் இப்பணிக்கு ஆகும் மதிப்பீடு 30,000/– க்கு நிர்வாக அனுமதி வேண்டி மன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.

2. மேற்கண்ட பணியினை பொது நிதியில் மேற்கொள்ளவும் மற்றும் 2019–2020 ஆம் ஆண்டு திருத்திய வரவு செலவு திட்டத்தின் மூலம் பணி மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

3. பணியின் அவசர அவசியம் கருதி, பொதுமக்கள் நலன் கருதி, மேற்கண்ட பொருட்கள் சப்ளை செய்வதற்கு, நகராட்சி ஒப்பந்ததாரர் திரு.முருகன் அவர்கள் மூலம் பணி மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

## பொருள் : 19

**பல்லடம் நகராட்சிக்குச் சொந்தமான பேருந்து நிலைய வளாகத்தில் நுழைவு வாயிலின் முன்புறம் தாட்கோ நிறுவனத்தால் கட்டப்பட்ட வணிக வளாகக் கட்டிடம் அமைந்துள்ளது. கட்டிடம் பழுதடைந்து பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளது, பேருந்துநிலையத்திற்கு வரும் பொதுமக்கள் பாதுகாப்பு நலன் கருதியும், விஷமிகள் செல்லாத வண்ணம் அப்பகுதியினை பாதுகாக்கும் வகையில் பாதுகாப்பு தடுப்பு அமைக்கும் (G.I post and G.I Sheet Barricade) பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.1.00 இலட்சத்திற்கு உரிய நிர்வாக அனுமதி வேண்டி மன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.**

**அலுவலக குறிப்பு**

**1.மன்றம் அனுமதி வழங்கலாம்.**

**2.மேற்காணும் பணியினை நகராட்சி வருவாய் நிதியின் மூலம் மேறகொள்ளவும் 2019-2020 ஆம் ஆண்டு திருத்திய வரவு மற்றும் செலவு திட்டத்தில் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.**

## பொருள் : 20

பல்லடம் நகராட்சிக்குட்பட்ட 9 பகுதிகளில் உள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் பெறப்படும் குடிநீர் அந்தந்தப்பகுதிகளுக்கு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. நீரேற்றம் செய்யும்

குடிநீரின் அளவினை கணக்கிடவும் மேலும் குடிநீர் விநியோகம் செய்யப்படும் பகுதிகளுக்கு விநியோகம் செய்யப்படும் போது குறையும் குடிநீரின் அளவுகளை கணக்கிடவும் குறியீட்டு அளவுகோல் ( Measuring Scale) அவசியம் பொறுத்தப்பட வேண்டும்.1.நாரணாபுரம் மேல்நிலைத்தொட்டி, 2.கல்லம்பாளையம் மேல்நிலைத்தொட்டி, 3. BDO குடியிருப்பு மேல்நிலைத்தொட்டி 4.வடுகபாளையம் மேல்நிலைத்தொட்டி, 5.சேடபாளையம் மேல்நிலைத்தொட்டி, 6. ராயர்பாளையம் மேல்நிலைத்தொட்டி, 7.பனப்பாளையம் மேல்நிலைத்தொட்டி, ஆகிய ஏழு இடங்களில் அளவுகோல் பொருத்த ஏற்படும் மதிப்பீட்டுத் தொகை ரூ.2.00 இலட்சத்திற்கு உரிய நிர்வாக அனுமதி வேண்டி மன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.

2. மேற்கண்ட பணியினை வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மற்றும் 2019–2020 ஆம் ஆண்டு திருத்திய வரவு செலவு திட்டத்தின் மூலம் பணி மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

## பொருள் : 21

பல்லடம் நகராட்சி பகுதிகளில் 2வது பில்லூார் அத்திக்கடவு இரண்டாவது கூட்டு குடிநீர் திட்டத்தின் கீழ் 9 மேல்நிலைத்தொட்டிகள் மூலம் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டுவருகிறது. இக்குடிநீரினை பாதுகாப்பான குடிநீர் வழங்கும் பொருட்டு திரவ குளோரின் கலந்து விநியோகம் செய்யும் வகையில் 9 மேல்நிலைத்தொட்டிகளின் உட்புறம் கூரை அமைத்து மின்மோட்டார் வாயிலாக தேவையான அளவு குளோரின் கலந்து குடிநீர் விநியோகம் செய்யப்பட்டுவருகிறது. தற்சமயம் வார்டு எண்.18 எஸ்.ஏ.பி நகர் பகுதியில் 1 இலட்சம் லிட்டர் கொள்ளவு , NSP நகர் பகுதியில் 1.00 இலட்சம் லிட்டர் கொள்ளவு மற்றும் ராயர்பாளையம் பகுதியில் 2.00 இலட்சம் லிட்டர் கொள்ளவு கொண்ட மூன்று மேல்நிலைத்தொட்டிகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. மூன்று மேல்நிலைத்தொட்டிகள் அமைக்கப்பட்ட இடங்களில் திரவ குளோரின் அமைப்பு ஏற்படுத்த மேற்கூரை (Shed) மற்றும் Flooring Concrete அமைப்பதற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.2.50 இலட்சத்திற்கு உரிய நிர்வாக அனுமதி வேண்டி மன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்கண்ட பணியினை வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மற்றும் 2019 – 2020 ஆம் ஆண்டு திருத்திய வரவு செலவு திட்டத்தின்மூலம் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

## பொருள் : 22

பல்லடம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.3 தெற்குபாளையம் சிவசக்தி நகர் 2வது வீதியில் உள்ள தார்சாலை பழுதடைந்துள்ளதை சட்டமன்ற உறுப்பினர் பல்லடம், அவர்கள் நேரடி ஆய்வின்போது சீரமைக்கக் கோரியதின்படி, இப்பணியினை மேற்கொள்ள தயார்

செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.3.30 இலட்சம் ஆகும். மேற்கண்ட பணி மேற்கொள்ள தனி அலுவலரின் நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.

2. மேற்கண்ட பணியினை வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மற்றும் 2019–20 ஆம் ஆண்டு திருத்திய வரவு செலவு திட்டத்தின் மூலம் பணி மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

## <u>பொருள் : 23</u>

பல்லடம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.14 செட்டிபாளையம் ரோடு சி.டி.சி சாலை சந்திப்பு முதல் நகராட்சி எல்லை முடிவு மேற்கு பகுதி வரையிலுள்ள பகுதிகளுக்கு புதியதாக 90mmØ மற்றும் 110mmØ பைப்லைன் அமைப்பதற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.4.00 லட்சம் ஆகும். மேற்கண்ட பணி மேற்கொள்ள தனி அலுவலரின் நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்.

2. மேற்கண்ட பணியினை வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மற்றும் 2019–20 ஆம் ஆண்டு திருத்திய வரவு செலவு திட்டத்தின் மூலம் பணி மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

## <u>பொருள் : 24</u>

**பல்லடம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 1 முதல் 18 வரை உள்ள வார்டுகளில் (UIDSSMT) தவணை முறையில் குடிநீர் இணைப்பு வழங்குதல் திட்டத்தில் இணைப்புகள் இல்லாத சொத்துவரி விதிப்பு உள்ள வீடுகளுக்கு இணைப்புகள் வழங்குவதற்கு வரப்பெற்ற விண்ணப்ங்களின் பேரில் மதிப்பீடு தயார் செய்ய வீடுகளுக்கு ஆய்வு செய்யப்பட்டதில் கீழ்க்கண்ட விரிவாக்கப்பகுதிகளில் குடிநீர் வினியோகக்குழாய் இல்லாதது தெரியவந்தது. மேலும், இத்திட்டபணியின் 6 மீ தொலைவில் வினியோகக்குழாய் இருக்கும்படி இணைப்பு வழங்க அறிவுறுத்தப்பட்டதால் வினியோகக்குழாய் இல்லாத கிழ்க்கண்ட இடங்களுக்கு வினியோகக்குழாய் அமைக்க வேண்டியுள்ளது. 1) வார்டு 7 மீனாட்சி அவென்யூ - 45 மீட்டர் 3" PVC 2) வார்டு 8 பழனிச்சாமி நகர் - 190 மீட்டர் 3" PVC 3) மாணிக்காபுரம் சாலை JKJ காலனி எக்ஸ்டன்சன் - 75 மீட்டர் 4) வார்டு 11 கணபதி நகர் 80 மீட்டர் 5) வார்டு 11 காளியப்பா நகர் 70 மீட்டர் 6) வார்டு 11 வடுகபாளையம் குமரன் நகர் 35 மீட்டர் 7) வார்டு 11 மகாலட்சுமி அவென்யூ 90 மீட்டர் 8) வார்டு 14 செட்டிபாளையம் ரோடு 120 மீட்டர் 9) வார்டு 12 மேற்கு பல்லடம் கலைமகள் கார்டன் அருகில் 30 மீட்டர் 10) வார்டு 1 கல்லம்பாளையம் மேற்கு 540 மீட்டர் 11) வார்டு 5 பட்டேல் ரோடு 45 மீட்டர் 12) வார்டு 2 சேடபாளையம் குமரன் வீதி 700 மீட்டர் 13) வார்டு 4 DMD நகர் 350 மீட்டர் ஆகவே, மேற்குறிப்பிட்டுள்ள பகுதிகளில் வினியோகக்குழாய் நீடிப்பு செய்தல் புததாக வினியோகக்குழாய் அமைத்தல் ஆகிய பணிகளுக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.8.90 இலட்சத்திற்கு உரிய நிர்வாக அனுமதி வேண்டி மன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.**

**<u>அலுவலக குறிப்பு</u>**

**1.மன்றம் அனுமதி வழங்கலாம்.**

**2.மேற்காணும் பணியினை நகராட்சி வருவாய் நிதியின் மூலம் மேறகொள்ளவும் 2019-2020 ஆம் ஆண்டு திருத்திய வரவு மற்றும் செலவு திட்டத்தில் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்**

## பொருள் : 25

பல்லடம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 08 ல் குமரன் வீதியில் கழிவுநீர் கால்வாய் அமைப்பு இல்லாமல் அப்பகுதியில் சுமார் 20 குடியிருப்புகளுக்கு வீடுகளுக்கு அருகில் தற்காலிக குழி அமைத்து கழிவுநீரினை தேக்கி வருவதால் சுகாதார கேடு விளைவிக்கும் சூழ்நிலைவுள்ளது என நகராட்சி பொறியாளர் ஆய்வில் தெரியவந்தது. எனவே அப்பகுதியில் மழைநீர் வடிகால் அமைப்பு ஏற்படுத்த தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.3.80 இலட்சத்திற்கு உரிய நிர்வாக அனுமதி வேண்டி மன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1.மன்றம் அனுமதி வழங்கலாம்.

2.மேற்காணும் பணியினை நகராட்சி வருவாய் நிதியின் மூலம் மேறகொள்ளவும் 2019-2020 ஆம் ஆண்டு திருத்திய வரவு மற்றும் செலவு திட்டத்தில் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

## பொருள் : 26

பல்லடம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 18 ல் அமைந்துள்ள அந்தேரிக்கவுண்டர் வீதி விரிவாக்கப்பகுதியில் மேற்கு 1,2 குறுக்கு வீதிகள் மற்றும் கான்கீரிட் சாலை எதிர்புறம் கிழமேல் வீதி ஆகிய பகுதிகளில் மழைநீர் வடிகால் இல்லாமல் சாலையின் முன்புறம் அப்பகுதியிலுள்ள வீடுகளின் கழிவு நீரினை தேக்கி வைத்தும், குழாய் மூலமாக சுமார் 100 மீட்டர் தூரமுள்ள வடிகாலில் இணைத்தும் கழிவுநீரினை அப்புறப்படுத்துவதால் தேங்கியுள்ள நீரினால் ஏற்படும் சுகாதாரச்சீர்கேடு குழாய் இணைப்புகளால் கழிவு ஏற்படுவதால் உண்டாகும் சிரமங்களை தவிர்க்கும் பொருட்டு மேற்குறிப்பிட்ட இடங்களில் மழைநிர் வடிகால் அமைப்பு ஏற்படுத்த தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.7.00 இலட்சத்திற்கு உரிய நிர்வாக அனுமதி வேண்டி மன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1.மன்றம் அனுமதி வழங்கலாம்.

2.மேற்காணும் பணியினை நகராட்சி வருவாய் நிதியின் மூலம் மேறகொள்ளவும் 2019-2020 ஆம் ஆண்டு திருத்திய வரவு மற்றும் செலவு திட்டத்தில் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

## பொருள் : 27

பல்லடம் நகராட்சிக்கு சொந்தமான நீர்த்தார் அடக்கம் செய்யும் சுடுகாடு பல்லடம் நகராட்சி பேருந்து நிலையம் எதிர்புறம் அமைந்துள்ளது. மேற்கண்ட இடத்தினை பல்லடம் சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் நேரில் ஆய்வு போது ஏற்கனவேயுள்ள முற்புதர்களை அகற்றி புதிதாக மண்நிரப்பியும், முன்புறம் பக்கத்தூண் அமைத்து, காவலர் அறை மற்றும் விளக்கு வசதி, தண்ணீர் வசதி, நிழற்கூரை போன்ற வசதிகள் செய்யுமாறு அறிவுறுத்தினார். அதன் அடிப்படையில் மேற்கண்ட பணிகள் செய்வதற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.9.75 இலட்சத்திற்கு உரிய நிர்வாக அனுமதி வேண்டி மன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1.மன்றம் அனுமதி வழங்கலாம்.

2.மேற்காணும் பணியினை நகராட்சி வருவாய் நிதியின் மூலம் மேறகொள்ளவும், 2019-2020 ஆம் ஆண்டு திருத்திய வரவு மற்றும் செலவு திட்டத்தில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

## பொருள் : 28

நகராட்சி நிர்வாக ஆணையர்,சென்னை அவர்களின் கடிதம் ஒ.மு.எண்.13433/2018/ஜே1 நாள். 17.09.2018 ன்படி பல்லடம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 1 முதல் 18 முடிய உள்ள பகுதிகளில் டெங்கு காய்ச்சல் மற்றும் இதர காய்ச்சலினால் பாதிக்கப்படுவதை தடுக்கும் வகையில் 300 வீடுகளுக்கு ஒரு கொசுப்புழு களப்பணியாளர்கள் வீதம் 49 களப்பணியாளர்கள் பணி செய்ய வேலை உத்திரவு மெட்ராஸ் இன்ப்ரா , உடுமலைப்பேட்டை, எனும் நிறுவனத்திற்கு வழங்கப்பட்டு பணி நடைபெற்று வருகிறது. மேற்கண்ட வேலை உத்திரவு காலம் 31.12.2019 ந் தேதியுடன் முடிவடைவதால், மீண்டும் மேற்கண்ட பணிக்கான காலத்தை நீட்டிப்பு செய்து வழங்க வேண்டி மேற்படி நிறுவனத்தினர் விண்ணப்பித்துள்ளனர்.

தற்போது பல்லடம் நகராட்சி பகுதியில் டெங்கு மற்றும் சாதாரண காய்ச்சலினால் ஒருசிலர் பாதிக்கப்பட்டுள்ளனர். இவர்கள் குணமடைந்து நல்ல நிலையில் உள்ளனர். மேலும் இந்நகராட்சி பகுதியில் காய்ச்சலால் பாதிக்கப்படுவதை தடுக்கும் வகையில் பணிகள் மேற்கொள்ள வேண்டியுள்ளதால், ஏற்கனவே பணிக்கு ஆட்களை சப்ளை செய்துவரும் ஒப்பந்த நிறுவனத்திற்கே 01.01.2020 முதல் 31.03.2020 முடிய 3 மாத காலங்களுக்கு மட்டும் பொது சுகாதார அவசர அவசியத்தை முன்னிட்டு டெங்கு காய்ச்சல் தடுப்பு கொசுப்புழு ஒழிப்பு பணியாளர்கள் 49 பேரை (Domestic Breeding checkers) வெளி கொணர்வு அடிப்படையில் மேற்கொள்ளவும், மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

1. பொது சுகாதார அவசர அவசியம் கருதி மூன்று மாத காலத்திற்கு (01.01.2020 முதல் 31.03.2020) வேலை உத்திரவு வழங்க அனுமதிக்கலாம்.
2. மூன்று மாத காலத்திற்குரிய செலவினத்தை பொதுநிதியில் மேற்கொள்ளலாம்.

## பொருள் : 29

**பல்லடம் நகராட்சி வார்டு எண் 08 ல் பனப்பாளையம் பகுதியில் குழந்தைகள் நல மையம் கட்டிடம் கட்டுவதற்கு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத்திட்டம் 2019-2020 ம்ஆண்டின் கீழ் ரூ.10.00 இலட்சம் மதிப்பீட்டில் பணி நடைபெற்று வருகிறது. மேற்கண்ட பணிக்கான மதிப்பீட்டில் கட்டிடம் கட்டுவதற்கு அனைத்து இனங்களும் உள்ளது. சுற்றுசுவர் கட்டுவதற்கு மதிப்பீட்டில் வழிவகை இல்லை.மேற்கண்ட இடத்தினை சட்டமன்ற உறுப்பினர், பல்லடம் அவர்கள் பணி நடைபெற்று வருவதை நேரில் ஆய்வு செய்து அங்கன்வாடி கட்டிடத்தின் முன்பக்கம் மற்றும் பின்பக்கம் சுற்று சுவர் அமைக்கவும், மண் தரை உள்ள இடத்தில் Paver Block அமைத்து தருமாறு அறிவுறுத்தினார். அதன் அடிப்படையில், மேற்கண்ட பணிகள் செய்வதற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.6.00 இலட்சம் ஆகும்.எனவே, மேற்கண்ட பணி மேற்கொள்ள ரூ.6.00 இலட்சம் மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதி வேண்டி மன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.**

**<u>அலுவலக குறிப்பு</u>**

**1.மன்றம் அனுமதி வழங்கலாம்.**

**2.மேற்காணும் பணியினை நகராட்சி வருவாய் நிதியின் மூலம் மேற்கொள்ளவும் மற்றும் 2019-2020 ஆம் ஆண்டு திருத்திய வரவு, செலவு திட்டத்தில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.**

**(ந.க.எண் 785/2019/இ1)**

## பொருள் 30

பல்லடம் நகராட்சியில் நடைபெற இருக்கும் பல்வேறு திட்டப்பணிகளுக்கான தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி மேம்பாட்டு திட்டம் 2019-2020 (TURIP), UIDSSMT திட்டத்தின் கீழ் குடிநீர் இணைப்பு இல்லாத வீடுகளுக்கு குடிநீர் குழாய் அமைக்கும் பணிக்காக தயாரிக்கப்பட்ட பிரேரணை மற்றும் தூய்மை இந்தியா திட்டம் (SBM) மூலம் உலர் சேகரிப்பு மையம் (Resource Recovery center) கட்டுதல் பணிக்கான பிரேரணைகள் தயார் செய்து உரிய நிர்வாக அனுமதி பெறுவதற்கும் மற்றும் தொழில்நுட்ப அனுமதி பெறுவதற்கும் தேவையான SITE PLAN, DRAWINGS ஆகியவற்றை AUTO CAD மூலம் தயார் செய்வதற்கு ஆகும் மதிப்பீடு ரூ.20,000 உரிய நிர்வாக அனுமதி வேண்டி மன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு :</u>

1.மன்றம் அனுமதி வழங்கலாம்.

2,மேற்கண்ட பணிக்கு ஆகும் செலவினத்தை திரு.s.ஜோதிராமலிங்கம், ஈஷா கன்ஸ்டரக்ஷன்ஸ், பல்லடம் அவர்கள் மூலம் ஒப்படைப்பு பணியாக மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

3.மேற்கண்ட பணியினை வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மற்றும் 2019-2020 ஆம் ஆண்டு வரவு மற்றும் செலவு திட்டத்தில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண் 684/2019/இ1)

தனி அலுவலர்
பல்லடம் நகராட்சி